உத்தரவைப் பெற்று எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

கால்நடைப் பண்ணை

***17603—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதியிலே ஒரு கால்நடை பண்ணை அமைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் 12 கால்நடைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றிலே 8 கால்நடைப் பண்ணைகளும், மூன்று ஆட்டுப் பண்ணைகளும், ஒரு பகுதிநேரப் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தேனி மாவட்டத்திற்கு அருகிலே உள்ள விருதுநகர் மாவட்டத்தில், சாத்தூரிலே ஓர் ஆட்டுப் பண்ணை செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், அபிஷேகப்பட்டியில் மாவட்ட கால்நடைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. எனவே, தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதியிலே கால்நடைப் பண்ணை அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதி அமைந்துள்ள தேனி மாவட்டம் இயற்கை வளமும், மலைகளும் சூழ்ந்த பகுதி. இரண்டு இலட்சம் மாடுகளும், மூன்று இலட்சம் ஆடுகளும் அந்த மாவட்டத்தில் இருக்கின்றன. பால் உற்பத்தியில் முன்னேறிய மாவட்டங்களில் தேனி மாவட்டமும் ஒன்று. அம்மாவட்டத்தில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் மற்றும் விவசாயிகள், ஆடுகள், மாடுகள் போன்றவற்றை வளர்ப்பதன் மூலமாகக் கிடைக்கும் வருவாயை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மாவட்ட கால்நடைப் பண்ணைகள் அமைந்துள்ளன. இருப்பினும், தேனி மாவட்டத்தை மையமாகக் கொண்டு பெரியகுளம் தொகுதியிலோ, போடிநாயக்கனூர் தொகுதியிலோ, ஆண்டிப்பட்டி தொகுதியிலோ, கம்பம் பகுதியிலோ அல்லது அம்மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு பகுதியிலோ கால்நடைப் பண்ணை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், அப்பகுதிவாழ் மக்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் கால்நடைப் பண்ணையைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கால்நடைப் பண்ணை அமைப்பதற்குத் தேவையான அனைத்து வாய்ப்புகளும், வசதிகளும் அங்கே இருக்கின்றன. அப்பகுதியில் கால்நடைப் பண்ணை அமைக்கப்படும்பட்சத்தில், மரபணுச் சோதனைகள் மூலமாக தரமான, நல்ல கிடேரிக் கன்றுகளையும், எடை கூடுதலான ஆடுகளையும் உருவாக்க முடியும். பால் வளம் பெருகுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

(முற்பகல் 11-15)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதுபோன்று விரிவாகப் பேசாதீர்கள்.

திரு. ஏ. லாசர்: விவசாயிகளுக்கும் பயிற்சி அளிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாட்டுத் தீவனத்தை உற்பத்தி செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு விற்கவும் வாய்ப்புகள்

இருக்கின்றன. இப்படிப் பல்வேறு நன்மைகள் உள்ளடங்கியிருக்கின்றன. அம்மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்குப் பயன்படும் என்கின்ற தன்மையில், கால்நடைப் பண்ணை அமைப்பதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைப் பண்ணை அமைப்பதற்கு 100 ஏக்கர் முதல் 250 ஏக்கர் வரை நிலம் தேவைப்படும். தண்ணீர் வசதி இருக்க வேண்டும். நிலங்கள் கிடைக்கக்கூடிய பகுதியாக இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெரியகுளம் தொகுதியில் இதுபோன்ற வசதிகள் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, துறையின் சார்பாக புதியதாக கால்நடைப் பண்ணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்து, மேலும் ஒரு துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கடந்த 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எருமைநாயக்கன்பட்டியில் கால்நடை பராமரிப்பு அலுவலகம் ஒன்று துவக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். அதற்கான பணிகள் இதுவரை துவக்கப்படவில்லை. எனவே, அந்தப் பணிகள் எப்போது துவக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துவக்கப்பட வேண்டியது கால்நடைக் கிளை நிலையமா அல்லது அலுவலகமா என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதியதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இருக்கிறோம். அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் இந்த ஆண்டே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

சுற்றுலாத் தலம்

***21488—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தாமரைக்குளம், பழையாறு கடலில் கலக்கும் கழிமுகப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS